# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சை 2019

ஆண்டு: 7 திகதி: 23/11/2019

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி சத்தியதேவி பாலகங்காதரன்

மாணவர் பெயர்: ______________________________

| வினாக்கள் | புள்ளிகள் |
|---|---|
| வினா 1 | |
| வினா 2 | |
| வினா 3 | |
| வினா 4 | |
| வினா 5 | |
| மொத்தப் புள்ளிகள் | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி:**

முனியன் என்பவனுக்கு ஏராளமான நிலபுலன்கள் இருந்தன. ஆனால் அவன் கூலியாட்களுக்குக் காசு கொடுக்க விரும்பமாட்டான். அதனால், அவன் நிலங்களும் பயிரிடப்படாமல் கிடந்தன.

ஒரு நாள் அவ்வூருக்குச் சாமியார் ஒருவர் வந்தார். முனியன் அவரிடம் தன் குறையைக் கூறி முறையிட்டான். ‘‘ஐயா, எனக்கு வேலை செய்யப் பணியாளர்கள் இல்லை: என்னிடம் பணமும் இல்லை. நீங்கள்தான் அருள் செய்ய வேண்டும்,’’ என்று முனியன் வேண்டினான். சாமியார், முனியனின் கருமித்தனத்தைப் புரிந்துகொண்டார். அவர், முனியனுக்கு ஒரு மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்துவிட்டுப் போனார். அவன் சாமியார் சொல்லியவாறே அம்மந்திரத்தை உச்சரித்து வந்தான். சரியாக முப்பதாவது நாள் முனியன் முன் ஒரு பூதம் தோன்றியது. முதலில், அதைக் கண்டு அவன் அதிர்ந்து போனான். பிறகு அவன், ‘‘நீ இனி என் கட்டளைப்படி நடக்க வேண்டும். தெரிகிறதா?’’ என்று அதிகாரமாய்ப் பேசினான். ‘‘அப்படியே செய்வேன். ஆனால், ஓய்வு இல்லாமல் எனக்கு வேலை கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். இல்லை என்றால் உன்னைக் கொன்றுவிடுவேன்,’’ என்று பூதம் கூறியது. அதைக் கேட்ட முனியன், இனிச் செலவில்லாமல் தன் வேலை எல்லாம் நடந்தேறும் என்று மகிழ்ந்தான். உடனே, பூதத்தை அழைத்துச் சென்று பரந்துகிடந்த தன் நிலங்களைக் காட்டினான். ‘‘இவற்றைப் பண்படுத்தி நடவு நட்டுவிட்டு வா,’’ என்று கூறிவிட்டு அவன் வீடு திரும்பினான். பூதம் அதைச் செய்து முடிக்கப் பல நாள்கள் ஆகும் என்று முனியன் நினைத்தான்.

முனியன் வீட்டை அடைந்தபோது, எல்லா வேலைகளையும் முடித்துவிட்டுப் பூதம் அவனுக்காக வீட்டு வாசலில் காத்திருந்தது. முனியன் வேறு என்னென்னவோ வேலைகள் கொடுத்தான். எல்லாவற்றையும் பூதம் வெகுவிரைவில் முடித்துவிட்டு முனியனிடம் வந்து சேர்ந்தது. பூதத்தின் ஆற்றலைக் கண்டு முனியன் மிரண்டு போனான்: அதற்கு எப்படித் தொடர்ந்து வேலை கொடுப்பது என்று தெரியாமல் திகைத்தான். முனியன் தன் மனைவியிடம் தன் அச்சத்தைக் கூறி வருந்தினான். அதற்கு அவள், ‘‘கவலைப்படாதீர்கள். நான் பூதத்தைச் சமாளிக்கிறேன்,’’ என்று கூறினாள்.

மறுநாள் அவள் பூதத்தை அழைத்து, தன் நீண்ட தலைமுடி ஒன்றை எடுத்து, ''இதை வளையாமல் நேராக்கிக் கொண்டு வா,'' என்று கூறிப் பூதத்திடம் கொடுத்தாள். பூதம் அதை நேராக்க எவ்வளவோ முயன்றது. ஆனால், அந்த முடி வளைந்து கொண்டுதான் இருந்தது. கொடுத்த வேலையை முடிக்காமல் தலைவியிடம் போக வெட்கப்பட்டுப் பூதம் அங்கிருந்து ஓடி மறைந்தது. அன்றுமுதல் முனியன் கருமித்தனம் இன்றி வாழத் தொடங்கினான்.

---

மேலே தரப்பட்டுள்ள பகுதியைப் படித்து புரிந்து கொண்டபின்னர் பின்வரும் கேள்விகளுக்குரிய விடையை விபரமாக எழுதுக.

1 முனியனின் நிலங்கள் ஏன் பாழ்பட்டுக் கிடந்தன?

________________________________________

________________________________________

2 பூதம் விதித்த நிபந்தனையை ஏன் முனியன் ஏற்றுக்கொண்டான்?

________________________________________

________________________________________

3 முனியன் ஏன் அச்சம் அடைந்தான்?

________________________________________

________________________________________

________________________________________

4 முனியனுக்கு அவன் மனைவி செய்த பேருதவி என்ன?

________________________________________

________________________________________

________________________________________

5 எது முனியன் திருந்துவதற்குக் காரணமாய் இருந்தது?

________________________________________

________________________________________

________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களை வைத்து ஐந்து சொற்களுக்குக் குறையாமல் வாக்கியம் எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1 | பூக்கள் | |
| 2 | திருமணம் | |
| 3 | மனுநீதிகண்ட சோழன் | |
| 4 | மூவேந்தர்கள் | |
| 5 | தீபாவளி | |
| 6 | பாரம் பரிய உணவு | |
| 7 | அன்பு | |
| 8 | விடுமுறை | |
| 9 | நண்பர்கள் | |
| 10 | அப்துல் கலாம் | |

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**இரண்டு வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக.**

| | |
|---|---|
| 1 | அகிலா அதிகாலையில் எழுந்தாள்.<br>அவள் தன் பாடங்களைத் தெளிவாகக் கற்றாள். |
| | |
| 2 | கண்ணன் பேச்சுப் போட்டியில் பங்கேற்றான்.<br>அவன் திறமையாகப் பேசினான். |
| | |
| 3 | மாணவன் பள்ளி முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தான்.<br>அப்போது அவன் ஒரு முதியவரைச் சந்தித்தான். |
| | |
| 4 | மலர்விழியின் தாயார் அழகான பூக்களை வாங்கினார்.<br>அவர் அதைத் தொடுத்து மாலைகளாக்கினார். |
| | |
| 5 | வாணி நூலகத்திற்குச் சென்றாள்.<br>அவள் புத்தகங்களை இரவல் பெற்றாள். |
| | |

| வினா இல | 4 | புள்ளிகள் | 20 | பக்கம் | 6 |
| --- | --- | --- | --- | --- | --- |

**கடிதம்**

எமது தமிழ்க் கல்வி நிலையத்தில் நடைபெற்ற வாணிவிழா பற்றி விபரித்து **70** சொற்களுக்கு குறையாமல் உமது நண்பருக்குக் கடிதம் எழுதுக.

| வினா இல | 5 | புள்ளிகள் | 25 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**கட்டுரை**

பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றைப்பற்றி **125** சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.

1.0 புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் ஊடகங்களின் பங்கு

1.1 நீங்கள் அண்மையில் கலந்து கொண்ட ஒரு தமிழர் திருமணவிழா.